**28.3.2015**

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>கொடைக்கானலில் கோடை சீசன் துவங்கியது</u>

கொடைக்கானலில் பிளம்ஸ் பழம் சீசன் துவங்கியுள்ளது கொடைக்கான லில் தற்பொழுது கோடை சீசன் துவங்கியுள்ளது. அதோடு பிளம்ஸ் பழ சீசனும் துவங்கியுள்ளது. மேலும் அட்டுவம்பட்டி, பள்ளங்கி, பிரகாசபுரம் உள்ளிட்ட பகுதிகளில் விளைச்சல் அதிகரித்துள்ளதால் இந்த கோடை பிளம்சின் மொத்தவிலை கிலோ 150ரூபாய் முதல் 200வரை இருப்பதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். சுற்றுலா பயணிகள் ஆர்வமுடன் வாங்கிச் செல்வதாகவும் கூறியுள்ளனர்.

### <u>கறவை மாடு வளர்ப்பு பயிற்சி</u>

போடி அருகே சங்கராபுரம் ஊராட்சி மன்றக் கூடத்தில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் மூலம் செனார்டு தொண்டு நிறுவனம் நடத்தும் 6 நாள் அறிவியல் முறையிலான கால்நடை வளர்ப்பு பயிற்சி முகாம் தொடங்கியது. நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் வெங்கட்ரமணா தலைமை வகித்தார். ஊராட்சி மன்றத் தலைவி செப்ந்தரவள்ளி முன்னிலை வகித்தார். மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சந்திரசேகர், சின்னமனூர் கனரா வங்கி முதன்மை மேலாளர் தனபால் ஆகியோர் பங்கேற்று முகாமை தொடங்கி வைத்து, முகாமில் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கினர். செனார்டு தொண்டு நிறுவன செயலாளர் பி.கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக உதவி பேராசிரியர் செந்தில் பங்கேற்று பயிற்சி அளித்தார். பயிற்சி வகுப்புகள் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறுகிறது.

**விவசாயிகள் பயிரிடும் மூலிகைகளை கொள்முதல் செய்ய நடவடிக்கை**

விருதுநகர் மாவட்டத்தில் இடைத் தரகர்கள் இல்லாமல் மூலிகைகளை தூத்துக்குடி தனியார் நிறுவனம் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யப் படும் என ஆட்சியர் வே.ராஜாராமன் தெரிவித்தார். விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள வளர்ச்சி மன்றக் கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு ஆட்சியர் வே.ராஜாராமன் தலைமை வகித்தார். வேளாண்மைத் துறை இணை இயக்குநர் எஸ்.சுப்பையா முன்னிலை வகித்தார். இதில் நடைபெற்ற விவாதம்: சிவசாமி (முடுக்கன்குளம்): வரலொட்டி, காரியாபட்டி, அழகியநல்லூர், முடுக்கன்குளம் உள்ளிட்ட பகுதிகளில் தரமான பருத்தி விதைகள் இல்லாத காரணத்தால் அவை காய்ந்து கருகின. ராசுப்பிரமணியராஜா (மா விவசாயிகள் சங்கம்): மாவட்டத்தில் ராஜபாளையம், விருதுநகர், சாத்தூர், காரியாபட்டி, சிவகாசி உள்ளிட்ட வட்டாரப் பகுதிகளில் மூலிகை செடிகளை பயிரிடுகின்றனர். சாகுபடி செய்யும் நேரத்தில் விற்பனை செய்ய வழியின்றி இடைத் தரகர்களால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். வன விலங்கு பட்டியலில் இருந்து காட்டுப் பன்றிகளை நீக்கம் செய்ய வேண்டும். சர்க்கரை ஆலைகளில் நுழைவு வாயில் பகுதியில் எடை பார்க்கும் கருவியை சரி செய்த பின்னரே எடை பார்க்க வேண்டும். விஜயமுருகன் (தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்): நரிக்குடி, ஆணைக் குட்டம், திருச்சுழி, வத்திராயிருப்பு, சாஸ்தா கோயில் உள்ளிட்ட பகுதிகளில் ஆற்றுப் படுகையில் திருட்டுத் தனமாக மணல் எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் விவசாயிகள் கிணறுகளில் நீராதாரம் இன்றி பாதிக்கப்படும் சூழ்நிலையுள்ளது. இதற்கு ஆட்சியர் வே.ராஜாராமன் பதிலளித்து பேசியதாவது: வறட்சியை தாங்கி வளரும் வகையிலான பருத்தி விதைகளை வேளாண்மைத் துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்படும். மூலிகை சாகுபடியின் போது,

விவசாயிகள் இடைத் தரகர்களால் பாதிக்கப்படாமல், நல்ல விலை கிடைக்க தூத்துக்குடி தனியார் நிறுவனத்தின் சார்பில் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யப்படும். வன விலங்குகள் பட்டியலிலிருந்து காட்டுப்பன்றியை நீக்கம் செய்வதற்கு வனத்துறைக்கு பரிந்துரை செய்யப்படும். சர்க்கரை ஆலைக்கு கொண்டு வரப்படும் கரும்புகளை சரியான எடை பார்க்க ஏற்பாடு செய்யப்படும். இதுவரையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய கரும்பு கொள்முதல் பணம் ரூ.5 கோடியை வழங்க முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தி உறுதி செய்யப் படும். எந்தெந்த கடைகளில் தரம் குறைந்த விதை விற்பனை செய்கிறார்கள் என்ற விவரம் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும். மேற்கு மலைத் தொடர்ச்சி அடிவாரப் பகுதியில் சமதளப் பரப்புகளில் மணல் கடத்தலை தடுக்க அங்கு மரக்கன்றுகளை வைத்து பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் முனுசாமி, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செல்வம் உள்ளிட்ட அனைத்துத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**<u>மண் பரிசோதனை: விழிப்புணர்வு ஏற்படுத்த விவசாயிகள் வலியுறுத்தல்</u>**

மண் பரிசோதனை தொடர்பான விழிப்புணர்வை விவசாயிகளுக்கு ஏற்படுத்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாகையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் பேசியது: மயிலாடுதுறை ஆர். ராஜசேகரன்: ஆறுகளை தூர்வாரும் போது 5 கி.மீ., 10 கி.மீ. என பல்வேறு இடங்களில் தனித்தனியாக தூர்வாருகின்றனர். இடைப்பட்ட பகுதிகளில் தூர்வாராததால், மழைக்காலங்களில் தூர்வாராத இடங்களில் தண்ணீர் எளிதில் வெளியேற முடிவதில்லை. எனவே ஆற்றை தூர்வாரும்போது தலைப்பில் தொடங்கினால் கடைமடை வரை அந்த ஆண்டிலேயே தூர்வாரப்பட வேண்டும். கீழ்வேளூர் கே.என்.

ராஜேந்திரன்: தற்போது கிராமப்பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகிறது. ஆற்றுப்படுகைகளில் போர்வெல் அமைப்பதன் மூலம் நிலத்தடி நீரை அதிகப்படுத்தலாம். மண் பரிசோதனை தொடர்பான தெளிவான கருத்து விவசாயிகளுக்கு இல்லை. அதனால் நடமாடும் மண் பரிசோதனை நிலையம் அமைத்தால் விவசாயிகளுக்கு நலனாக அமையும். பூம்புகார் பூராசாமி (முன்னாள் எம்எல்ஏ): டிராக்டர் பற்றாக்குறை, அறுவடை இயந்திரம் பற்றாக்குறையை போக்க வேண்டும். தலைஞாயிறு கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு செல்வதற்கு நல்ல சாலை அமைத்துத் தர வேண்டும். காவிரி தனபாலன்: மேட்டூர் அணையில் வண்டல் மண் சேர்ந்து 30 சதவீத அளவு தூர்ந்து விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எனவே ஆறுகளை தூர்வாரும் பணியை உடன் தொடங்க வேண்டும். மாவட்ட ஆட்சியர் சு.பழனிசாமி: சம்பா தாளடி பருவத்தில் சாகுபடி செய்யப்பட்ட நெல் பரப்பில் சுமார் 1,21,305 ஹெக்டேர் இதுவரை அறுவடை நடைபெற்றுள்ளது. நடப்பு பருவத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டு திட்ட பயிர் அறுவடைப் பரிசோதனையில் அதிகபட்சமாக 8120 கிலோவும், குறைந்தபட்சமாக 740 கிலோவும் சராசரி மகசூலாக 4891 கிலோவும் கிடைக்கப் பெற்றுள்ளது. மேலும் நாகை மாவட்டத்தில் நிகழாண்டில் பயறு வகை சாகுபடி இலக்கு 100432 ஹெக்டேரும், பயறு வகை உற்பத்தி இலக்கு 69 ஆயிரம் மெட்ரிக் டன்னும் நிர்ணயிக்கப்பட்டது. நடப்புப் பருவத்தில் நஞ்சைத் தரிசு நிலங்களில் பயிறுவகை பயிர்கள் சுமார் 87329 ஹெக்டேரில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ராபி பருவ பருத்தி 772 ஹெக்டேர் சாகுபடி முடிவடைந்துள்ளது. கோடை கால சாகுபடிக்கு தேவையான உரங்கள் கூட்டுறவு மற்றும் தனியார் துறைகளில் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது என்றார். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. பெஞ்சமின்பாபு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் எம்.

ராதாகிருஷ்ணன், கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் கோ. ராஜேந்திர பிரசாத், வேளாண்மை இணை இயக்குநர் (பொ) டி. கணேசன், மாவட்ட ஆட்சியாாின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஆர். சண்முகம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கரும்பு எடையுடன் அதிக மகசூல் பெற விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி யோசனை**

தஞ்சாவூர்: "கரும்பு பயிரில் அதிக எடையுடன் கூடிய மகசூல் பெற, நீர் பாசனம் செய்ய வேண்டிய பருவங்கள் குறித்து, விவசாயிகளுக்கு, தஞ்சை மாவட்ட சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி, யோசனை தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கரும்பு பயிர் நிமிர்ந்து நிற்பதற்கும், வெயிலின் தாக்கத்தால் வாடாமல் இருப்பதற்கும், வேர் மூலம் ஊட்ட சத்துக்களை எடுத்து கொள்வதற்கும், ஒளிச்சேர்க்கை மூலம் சர்க்கரை மற்றும் மாவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும், பயிரினுள் நடைபெறும் வேதியியல் மாறுதல்களுக்கும், நீர் முக்கிய பங்கு வகிக் கிறது. வளரும் பயிரின் எடையில், 80 முதல் 85 சதவீதம் வரை நீர் உள்ளது. ஒரு டன் கரும்பு விளைவிக்க, 125 டன் நீர் தேவைப்படுகிறது. ஒரு டன் சர்க்கரை உற்பத்தி செய்ய, 1,350 டன் நீரை கரும்பு பயிர் எடுத்து கொள்கிறது. ஒருபோக கரும்பு சாகுபடி செய்ய, 2,000 முதல் 2,500 மி.மீ., நீர் தேவைப்படுகிறது. ஒரு ஹெக்டர் பரப்பில், ஒருபோக கரும்பு சாகுபடி செய்ய தேவைப்படும், 2,500 மி.மீ., நீரை கொண்டு இருபோக நெற்பயிரையோ அல்லது, ஐந்து போக சோளப்பயிரையோ அல்லது, எட்டு போக கம்பு பயிரையோ பயிரிடலாம். பாசன நீரை

பருவத்தை பொருத்து பல்வேறு இடைவெளிகளில் சுமார், 38 முதல், 40 முறை பாசனம் செய்ய வேண்டும். ஒன்று முதல், 35 வரை நாட்களான முளைப்பு பருவத்தில், ஏழு நாட்கள் இடைவெளியில், ஐந்து பாசனமும், 36 முதல், 100 நாட்கள் வரையிலான தூர்கட்டும் பருவத்தில், 10 நாட்கள் இடைவெளியில், ஐந்து பாசனம் செய்ய வேண்டும். மேலும், 101 முதல், 270 நாட்கள் வரையிலான வளர்ச்சி பருவத்தில், எட்டு நாட்கள் இடைவெளியில், 21 பாசனமும், 271 முதல் அறுவடை வரையிலான முதிர்ச்சி பருவத்தில், 13 நாட்கள் இடைவெளியில், ஆறு பாசனமும் என மொத்தம், 38 முறை கரும்புக்கு பாசனம் செய்வதன் மூலம், நீர்சத்து நிறைந்த நல்ல எடையுடன் கூடிய அதிக சர்க்கரை, பிழிதிறன் கொண்ட கரும்பு மகசூலாக கிடைக்கிறது. இவ்வாறு தெரிவித்தார்.

**<u>பர்கூர் இன மாடுகள் கண்காட்சி து.பாளையத்தில் நாளை ஏற்பாடு</u>**

ஈரோடு: பர்கூர் இன மாடுகளின் பாரம்பரியத்தை பேணிக்காகக்கவும், அவ்வின கால்நடைகள் பராமரிப்பை ஊக்குவிக்கும் வகையில், நாளை (29ம் தேதி), பர்கூர் பஞ்., துருச்சினாம்பாளையம் கிராமத்தில் உள்ள மந்தை வெளி மைதானத்தில், பர்கூர் இன கால்நடை கண்காட்சி நடக்கிறது. ஈரோடு மாவட்டம், அந்தியூர் தாலுகா, பர்கூர் மலைப் பகுதியில், பர்கூர் இன மாடுகள் தனிச்சிறப்பு பெற்றது. இம்மாடுகள், சிவப்பு நிற உடலில், வெள்ளைப் படலங்களுடன் காணப்படும். இவை செம்மறை மாடுகள் என்றும் அழைப்பர். இவற்றின் குளம்புகள் மற்றும் கொம்பின் அடிப்பகுதி, இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். பர்கூர் இனப்பசுவின் பாலில், "ஏ2' கேஸின் எனும் நன்மை தரும் புரதம் அதிகம் உள்ளதாக அறியப்பட்டுள்ளது. இவ்வித சிறப்பு பெற்ற பர்கூர் இனக்கால்நடைகளை பாதுகாக்கும் பொருட்டு, தூய பர்கூர் இனப்பசு மற்றும் காளைகளை வளர்ப்போரை ஊக்குவிக்கும் வகையில், பசு மற்றும் காளைகளக்கு, முதல் பரிசாக, 20,000 ரூபாய் இரு நபர்களுக்கும்,

இரண்டாம் பரிசாக, 10,000 ரூபாய் நான்கு பேருக்கும், மூன்றாம் பரிசாக, 5,000 ரூபாய் எட்டு நபர்களுக்கும், ஆறுதல் பரிசாக, 2,500 ரூபாய், 12 பேருக்கும் வழங்கப்பட உள்ளது. மொத்தம், 13 பரிசுகள் காளைக்கும், 13 பரிசுகள் பசுவுக்கும் என, 26 பரிசுகள் வழங்கப்பட உள்ளது. இக் கண்காட்சிக்கு, கால்நடைத்துறை அமைச்சர், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் உட்பட பலர் பங்கேற்கின்றனர். இக்கண்காட்சியில் விவசாயிகள் பங்கேற்று, தங்களது கால்நடைகளை அழைத்து வந்து பயன்பெறுமாறு, கலெக்டர் பிரபாகர், கால்நடைத்துறை மண்டல இணை இயக்குனர் முருகன் ஆகியோர் கேட்டுக்கொண்டனர்.

**<u>நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க நிர்வாகிகள் ஆலோசனை</u>**

திருச்சி: தேசிய, தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம், மாநில தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் திருச்சியில் நடந்தது. கூட்டத்தில், விவசாயிகள் வாங்கிய அனைத்து கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். தமிழகத்தை. வறட்சி மாநிலமாக அறிவிக்க வேண்டும். கரும்புக்கு. அரசு அறிவித்த விலையை வழங்க மறுக்கும் தனியார் சர்க்கரை ஆலைகளை, அரசுடைமையாக்க வேண்டும். இந்தியாவில் உள்ள அனைத்து நதிகளையும் தேசியமாக்கும் வகையில், தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். தமிழகத்தில், வறட்சியால் அழிந்து விட்ட விளைபொருட்களுக்கு உரிய நஷ்ட ஈடு வழங்க வேண்டும். விவசாய விளைபொருட்களை ஏற்றி செல்லும் வாகனங்களுக்கு. சுங்க சாவடிகளில் வரி வசூலிப்பதை தடை செய்ய வேண்டும். 60 வயதான விவசாயிகளுக்கு மாதம். 3,000 ரூபாய் ஓய்வூதியமாக வழங்க வேண்டும். நதிகளை தேசியமாக்குவது குறித்த கோரிக்கையை நிறைவேற்ற தவறும் பட்சத்தில், ஏப்ரல், 25ம் தேதி பிரதமர் வீட்டின் முன் உண்ணாவிரதம் இருப்பது, என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மாநில பொதுச்செயலாளர் பழனிவேல், செயலாளர்கள் முருகன், ரவி, தினேஷ், பொருளாளர்

கார்த்திகேயன், துணைத்தலைவர்கள் சந்திரசேகர், கிருஷ்ணன், கோபாலகிருஷ்ணன், முருகேசன் உள்பட விவசாயிகள் பங்கேற்றனர்.

**<u>வைகை அணையில் மீன்பிடிக்க மீன்வளத்துறை அனுமதி</u>**

ஆண்டிபட்டி: வைகை அணை நீர் தேக்கப்பகுதியில் மீன் பிடிக்க மீன் வளத்துறை மீண்டும் அனுமதித்துள்ளது. வைகை அணை நீர் தேக்கப்பகுதியில் மழைக்காலங்களில் ஒவ்வொரு ஆண்டும் லட்கணக்கான மீன் குஞ்சுகள் வளர்ப்புக்கு விடப்படும். விசுலிகளாக விடப்படும் கட்ளா, மிருகாள், ÷சாகு, திலேபியா வகை மீன் குஞ்சுகள் நன்கு வளர்ச்சி அடைந்ததும் மீனவர் கூட்டுறவு சங்கம் மூலம் பிடிக்கப்படும். மீனவர்கள் கூட்டுறவு சங்கத்தில் பதிவு பெற்ற 70 பரிசல்கள் மூலம் 140 மீனவர்கள் மீன் பிடித்து வருகின்றனர். பிடிபடும் மீன்களில் 50 சதவீதம் மீனவர்களின் சம்பளத்திற்கு கொடுக்கப்படும். மீதம் உள்ளவை மீன் வளத்துறை மூலம் விற்பனை செய்யப்பட்டு அசுசின் கணக்கில் வசுவு வைக்கப்படும். இந்த ஆண்டு மீன் பிடித்தல் மார்ச் 13 ல் துவக்கப்பட்டது. சில நாட்கள் பிடிக்கப்பட்ட பின் மீன் வளத்துறை அதிகாரிகள் மீன் பிடித்தலை நிறுத்தி வைத்தனர். மீன்கள் முழு வளர்ச்சி பெறுவதற்காக மீன் பிடித்தல் நிறுத்தி வைக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால் மீனவர்கள் பாதிப்படைந்தனர். தொடர்ந்து மீன் பிடிக்க அனுமதிக்கவேண்டும் என்று அதிகாரிகளை மீனவர்கள் வலியுறுத்தினர். மீன் வளத்துறை மூலம் அனுமதி கிடைத்ததால் வைகை அணை நீர் தேக்கத்தில் மீண்டும் மீன் பிடி தொழில் துவங்கி உள்ளது. வைகை அணையில் தண்ணீர் இருப்பு குறைவாக இருப்பதால் மீன்கள் அதிகஅளவில் பிடிபடும் என்று மீனவர்கள்தெரிவித்தனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### தர்பூசணி விளைச்சல் அமோகம்

புவனகிரி, : பரங்கிப்பேட்டை சுற்று வட்டார பகுதிகளில் எப்போதும் தர்பூசணி பயிரிடப்படுவது வழக்கம். தற்போது இப்பகுதியில் நாகை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சின்னகுமட்டி, பெரியகுமட்டி, கொத்தட்டை, அத்தியாநல் லூர், சம்மந்தம் உள்ளிட்ட பல்வேறு கிராமங் களில் தர்பூசணி அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளது. கோடைக் காலத்திற்கு ஏற்ற சிறந்த பழம் தர்பூ சணி என்பதால், தற்போது தர்பூசணி அறு வடை விறுவிறுப்பாக நடந்து வரு கிறது. தர்பூசணி விளையும் இடத்திற்கே வரும் வியாபாரிகள், மொத்தமாக விலை பேசி தர்பூசணி பழங்களை வெளியூர்களுக்கு எடுத்துச்சென்று விற்பனை செய்து வருகின்றனர். ஒரு கிலோ ரூ.7 முதல் 9 வரை மொத்த விலையில் விற்கப்படுகிறது. அதோடு மட்டுமல்லாது விளையும் இடத்திலேயே விவசாயிகள் தர்பூசணி பழங்களை நெடுஞ்சாலை ஓரங்களிலும் குவித்து வைத்தும் விற்பனை செய்து வருகின்றனர். வெயில் நேரத்தில் தர் பூசணி பழம், உடலின் உஷ் ணத்தை தணித்து, உடலில் நீர்ச்சத்தை அதிகரிக்கும் என்பதால் இப்பகுதியில் அறுவடை மற்றும் விற் பனை களை கட்ட துவங்கியுள்ளது.

### நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் 3500 பருத்தி மூட்டைகள் ரூ55 லட்சத்துக்கு விற்பனை

நாமக்கல், : நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில், 3500 பருத்தி மூட்டைகள் ரூ55 லட்சத்துக்கு விற்பனையானது.நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில், மொத்தம் 3,500 பருத்தி மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வந்தனர். தொடர்ந்து

வியாபாரிகள் முன்னிலையில் நடந்த பருத்தி ஏலத்தில், ரூ55 லட்சத்துக்கு விற்பனையானது.சுரபி ரக பருத்தி 100கிலோ எடைக்கொண்ட குவிண்டால் ரூ4,409 முதல் ரூ5,062க்கும், டிசிஎச் ரக பருத்தி ரூ4,106 முதல் ரூ4,581க்கும், ஆர்சிஎச் ரகம் ரூ3,918 முதல் ரூ4,409க்கும் விற்பனையானது. நேற்று நடந்த ஏலத்தில் 3500 பருத்தி மூட்டைகள் ரூ90 லட்சத்துக்குவிற்பனையானது.

**<u>நாமகிரிப்பேட்டையில் ரூ60 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம்</u>**

நாமகிரிப்பேட்டை, : நாமகிரிப்பேட்டையில் ரூ 60 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம் விடப்பட்டது. நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டையில் உள்ள ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர்கள் விற் பனை கூட்டுறவு சங்கத்தில் (ஆர்.சி.எம்.எஸ்) நேற்று மஞ்சள் ஏலம் நடந் தது. நேற்று 1080 மூட்டை கள் ஏலத்திற்கு வந்தது. விரலி ரகம் 100கிலோ எடை கொண்ட மூட்டை அதிகப்பட்சமாக ரூ 10,600க்கும் குறைந்தபட்சம் ரூ8339க்கும் ஏலம் போ னது. அதேபோல் குண்டு ரகம் அதிகபட்ச மாக மூட்டை ரூ 8369க்கும் குறைந்தபட்சம் ரூ6099 க்கும் ஏலம் போனது. பனங் காலி ரகம் அதிகபட்சமாக ரூ22,299 க்கும் குறைந்தபட்சமாக ரூ11889 க்கும் விலை போனது. விரலி 660 மூட்டைகளும் உருண்டை 330 மூட்டைகளும் பனங்காலி 90 மூட்டைகளும் என மொத்தம் 1080 மூட்டைகளும் ரூ 60 லட்சத்திற்கு விற்பனையானது. கடந்த வாரம் விரலி ரகம் மூட்டை அதிகப்பட்சமாக ரூ 10400க்கு விற்பனையானது. நேற்று மூட் டைக்கு ரூ 200 உயர்ந்து ரூ 10,600க்கு விற்பனையாகியுள்ளது.

**<u>தர்மபுரியில் 4 ஆயிரம் ஏக்கரில் ராகி சாகுபடி</u>**

அரூர், : தர்மபுரி மாவட்டத்தில் அரூர், நல்லம்பள்ளி, பென்னாகரம், காரிமங்கலம், மொரப்பூர், பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய பகுதிகளில் அதிக அளவில் ராகி பயிரிடப்படுகிறது. மாவட்டம் முழுவது சுமார் 4 ஆயிரம் ஏக்கர் பரப்பில் ராகி பயிரிடப்பட்டுள்ளது. இது 115 நாள் பயிராகும். ஒரு

ஏக்கருக்கு மானாவாரியாக இருந்தால் 4 கிலோவும், நன்செய்யாக இருந்தால் 2 கிலோ ராகியும் விதைப்பதற்கு தேவைப்படும். ராகிக்கு தற்போது தேவை அதிகரித்துள்ளது. விலையும் உயர்ந்து வருகிறது. மொரப்பூர் பகுதிகளில் தற்போது ஜிபியு66, 28 ரக ராகி அறுவடை பணி நடைபெற்று வருகிறது. மண்டிகளில் 100 கிலோ கொண்ட மூட்டை ரூ. 2400க்கும், சில்லரையில் கிலோ ரூ. 30 வரையும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## பிளம்ஸ் சீசன் துவக்கம் : கிலோ ரூ.200க்கு விற்பனை

ஊட்டி, நீலகிரி மாவட்டத்தில் ஆண்டு தோறும் கோடை காலத்தின் போது, பிளம்ஸ் மற்றும் பீச்சீஸ் போன்ற பழங்கள் அதிகளவு காய்க்கும். நீலகிரி மாவட்டம் மற்றும் கொடைக்கானலில் மட்டுமே காணக்கூடிய இப்பழங்கள் புளிப்பு சுவையை கொண்டது. இதனை, சுற்றுலா பயணிகள் மட்டுமின்றி உள்ளூர் மக்களும் அதிகளவு வாங்கி சுவைப்பது வழக்கம். கடந்த சில ஆண்டுகளாக குரங்குகளின் தொல்லை அதிகரித்துள்ளதால், இப்பழங்களின் மகசூல் குறைந்துக் கொண்டே செல்கிறது. எனினும், ஊட்டி மற்றும் இதனை சுற்றியுள்ள ஒரு சில பகுதிகளில் இந்த பழங்களை சிலர் பாதுகாத்து விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். தற்போது பிளம்ஸ் பழ சீசன் துவங்கியுள்ளதால், மார்க்கெட்டிற்கு அதிகளவு விற்பனைக்கு வந்துள்ளன. கடை வீதிகள், நடைபாதை கடைகளிலும் பிளம்ஸ் பழங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது கிலோ ஒன்றுக்கு ரூ.150 முதல் 200 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## தேவாரம் பகுதியில் கீரை பயிரிட விவசாயிகள் ஆர்வம்

தேவாரம், : தேவாரம் பகுதியில் கீரை விவசாயம் செய்ய விவசாயிகள் ஆர் வம் காட்டி வருகின்றனர். தேவாரம் இயற்கையிலேயே வறண்ட நிலப்பகுதிகளை அதிகம் கொண்டுள் ளது. நீராதாரங்கள் இங்கு சுத்தமாகவே இல்லை. பருவமழையை நம்பியே பல்லாயிரம் ஏக்கர்

நிலங்களில் காய்கறிகள், பூக்கள் உள் ளிட்ட மானாவாரி பயிர்கள் விவசாயம் செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு பெய்த மழை காரணமாக இங்குள்ள கண்மாய்களில் நீர்வரத்து இருந்தது. தற்போது கோடை தொடங்கும் முன்பே தோட்டத்து கிணறுகளில் தண்ணீர் வறண்டு விட்டது. இதனால் விவசாயிகள் சோகத்தில் மூழ்கி உள்ளனர். விவசாயம் செய்த நிலங்கள் தற்போது எந்த பயிர்களையும் விதைக்க முடியாத நிலையில் உள் ளது. இருந்தாலும் குறைந்த அளவு உள்ள தண்ணீரை கொண்டு மாற்று விவசாயம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். கீரை விவசாயம் அதிகமான லாபத்தை தரக்கூடியதாக இருப்பதால், குறைந்த ஏக்கராக இருந்தாலும் அதிகளவில் கீரைகளை பயிரிட்டு வருகின்றனர். இதனை கொள்முதல் செய்ய மதுரை, தேனி, உள்ளிட்ட ஊர்களில் இருந்து அதிகளவில் வியாபாரிகள் வருகின்றனர். கீரை விவசாயம் காரணமாக அதிக லாபம் கிடைப்பதாக வும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், 'பருவகாலங்களில் மழை பெய் தால் மட்டுமே இப்பகுதிகளில் அனைத்து விவசாயமும் நடக்கும். இப்போதோ கோடைக்காலம் தொடங்கிவிட்ட நிலையில் விவசாயம் செய்ய முடியாதநிலை உள்ளது. அதிகமான பலனை தரக்கூடிய பயிர் களை விவசாயம் செய் தாலும் அதற்கு தண்ணீர் தேவை அதிகம் இருக்கும் என்பதால் கீரை வகைகளை பயிரிடுகிறோம்' என்றனர்.

## வேளாண் தொழில்களுக்கு ரூ.3,597 கோடி கடன் கலெக்டர் அறிவிப்பு

தேனி, : தேனி மாவட்டத்தில் வரும் நிதியாண்டில் வேளாண்மை தொழில் கடனாக ரூ.3,596 கோடியே 72 லட்சம் அளவிற்கு முன்னுரிமைக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்தார். கூட்டத்திற்கு கலெக்டர் வெங்கடாசலம் தலைமை வகித்தார். நபார்டு வங்கி யின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் வெங்கட்ட ரமணா, மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட அலுவ லர் உஷாதேவி, மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் ராமசுப்பிரமணி முன்னிலை

வகித்தனர். கலெக்டர் வெங்கடாசலம் பேசுகையில், ‘வரும் நிதியாண்டில் மேற்கொள்ள உள்ள வருடாந்திர கடன் திட்டம் குறித்த அறிக்கை இக்கூட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி தேனி மாவட்ட வேளாண்மை மற் றும் வேளாண்மை சார்ந்த தொழில்களுக்கு உரிய காலத்தில் போதுமான அளவு கடனுதவி வழங்கி, தொழில்களை மேம்படுத்த வரும் நிதியாண்டில் ரூ.3,596 கோடியே 72 லட்சம் அளவிற்கு முன்னுரிமை கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி இந்த கடன் தொகையை வேளாண்மை கடன்களுக்காக ரூ.3,014 கோடியே 41 லட்சமும், வேளாண் சாராத துறைகளுக்கு ரூ.240 கோடியே 45 லட்சமும், வணிக சேவை முன்னுரிமை கடனாக ரு.341 கோடியே 86 லட்சம் என மொத்தம் ரூ.3,596 கோடியே 72 லட்சம் அளவிற்கு முன்னு ரிமை கடன் வழங்கப்பட உள்ளது. இதனை வங்கியாளர்கள் முறைப்படுத்தி கடன் வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். கூட்டத்தில் ஏராளமான வங்கி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

<u>மாம்பழம் வரத்து அதிகரிப்பால் விலை சரிவு மல்கோவா ரகம் கிலோ ரூ.75 க்கு விற்பனை</u>



கோவைக்கு மாம்பழம் வரத்து அதிகரித்து இருப்பதால், விலை சரிய தொடங்கியுள்ளது.

மாம்பழம்வரத்துஅதிகரிப்பு

கோவை நகருக்கு பல்வேறு இடங்களில் இருந்து மாம்பழம் வருகிறது. கேரள மாநிலம் செம்மனாம்பதி, சித்தூர், வடக்கஞ்சேரி மற்றும் பொள்ளாச்சி ஆனைமலை, வேட்டைக்காரன்புதூர், ஆழியார் உள்ளிட்ட பகுதியில் இருந்தும், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி பகுதிகளில் இருந்தும் கோவை பழ மார்க்கெட்டுக்கு தினமும் 5 டன்வரை லாரிகள் மூலம் வருகிறது. மாம்பழ விளைச்சல் அதிகரித்து இருப்பதால் தற்போது 7 முதல் 10 டன்வரை வரத்து உயர்ந்துள்ளது.

விலைகுறையதொடங்கியது

இதனால் கடந்த வாரம் கிலோ ரூ.120-க்கு விற்பனை செய்யப்பட்ட மல்கோவா ரக மாம்பழம் ரூ.45 குறைந்து ரூ.75-க்கு விற்றது. இதேபோல் மற்ற மாம்பழ விலை விவரம் வருமாறு:- செந்தூரம் கிலோ- ரூ.60, இமாம்பசந்த்-ரூ.60, யுதாதாத்-ரூ.60, பங்கனம்பள்ளி-ரூ.75, நீலம்-ரூ.50, அல்போன்சா-ரூ.120, கோமாங்காய் -ரூ.75, நடுசாலை-ரூ.75, கிளிமூக்கு-

ரூ.75 என்ற விலையில் விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து உக்கடம் பழ மார்க்கெட் வியாபாரி கூறும்போது, மார்ச் முதல் மேமாதம்வரை மாம்பழ சீசன் இருக்கும். கோடை மழை சரியாக பெய்தால் விளைச்சல் மேலும் அதிகரித்து மே, ஜூன் மாதங்களில் விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது. இவ்வாறுவியாபாரிகள்தெரிவித்தனர்.

மாநகராட்சிஅதிகாரிகள்கண்காணிப்பு

கோவையில் மாம்பழம் வரத்து அதிகரித்துள்ள நிலையில், 'கார்பைட்' கல்லை வைத்து மாங்காய்களை பழுக்க வைப்பது கண்டுபிடிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகராட்சி சுகாதார பிரிவு அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்த கல் மூலம் பழுக்க வைத்த மாம்பழங்களை சாப்பிட்டால் வயிற்றுபோக்கு உள்ளிட்ட உபாதைகள் ஏற்படும். இதனால் மாம்பழ குடோன்கள் கண்காணிக்கப்பட்டு சோதனை நடத்தப்படும் என்றும் மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

## <u>விருத்தாசலம் அருகே கேரட் பயிரிட்டு விவசாயி புது முயற்சி</u>



விருத்தாசலம், விருத்தாசலம் அருகே உள்ள சின்னவடவாடி பகுதியில் உள்ள கிராமப்புறத்தில் விவசாயமே பிரதான தொழிலாக உள்ளது. இதில் ஏ.வடக்குப்பத்தை சேர்ந்த விவசாயி ராஜீவ்காந்தி என்பவர் விளை நிலத்தில் மிளகாய் சாகுபடி செய்து உள்ளார். இதனுடன் ஊடு பயிராக புது முயற்சியாக கேரட் பயிரிட்டிருந்தார். இவை தற்போது நன்கு செழித்து வளர்ந்து உள்ளது. பொதுவாக மலை பிரதேசங்களில் விளையும் தன்மையுடையது கேரட் அப்பகுதி விவசாயி நிலத்தில் விளைந்த கேரட் நன்கு வளர்ச்சி கண்டு இருக்கிறது. இதை ஏராளமான விவசாயிகள் ஆர்வத்துடன் பார்த்து சென்று வருகிறார்கள். இதுகுறித்து தோட்டக்கலை

துறை அதிகாரி ஒருவரிடம் கேட்ட போது, கேரட்டை பொறுத்தவரையில் நமது மாவட்டத்தில் வருமானம் பெற முடியாது. சிலர் பரிசோதனைக்காக பயிரிட்டு இருக்கலாம். இங்கு அறுவடை செய்யப்படும் கேரட்டின் கலர் வெளிர்ந்த நிறத்தில் காணப்படும். மகசூலும் இருக்க வாய்ப்பு இல்லை. எனவே இப்பகுதிக்கு ஏற்ற ஒன்றாக பீட்ரூட், முட்டைகோஸ், காலிபிளவர் போன்றவற்றை பயிரிடலாம். இவைகள் நன்கு விளைச்சல் இருக்கும் போதிய அளவில் வருமானமும் கிடைக்கும் என தெரிவித்தார்.

**<u>கடலூர் மாவட்டத்தில் மணிலா அறுவடை பணிகள் தீவிரம்</u>**



கடலூர், கடலூர் மாவட்டத்தில் மணிலா அறுவடை பணிகள் தீவிரமாக நடைபெற்றுவருகிறது.

<u>மணிலாசாகுபடி</u>

கடலூர் மாவட்டத்தில் விருத்தாசலம், குறிஞ்சிப்பாடி, கம்மாபுரம், பரங்கிப்பேட்டை, காட்டுமன்னார்கோவில், ஸ்ரீமுஷ்ணம், பண்ருட்டி ஆகிய பகுதிகளில் விவசாயிகள் கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் மணிலா நடவு பணியில் ஈடுபட்டனர். மாவட்டம் முழுவதும் 22 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் மணிலா சாகுபடி செய்திருந்தனர். 3 முதல் 3½ மாத பயிரான மணிலா தற்போது வளர்ந்து அறுவடை நிலையை எட்டி யுள்ளது. கடலூர், பரங்கிப்பேட்டை, குறிஞ்சிப்பாடி உள்ளிட்ட சில பகுதிகளில் மணிலா அறுவடை பணியை விவசாயிகள் தொடங்கிஉள்ளனர்.

<u>அறுவடைபணிகள்தீவிரம்</u>

கடலூரில் கண்டக்காடு பகுதியில் மணிலா அறுவடை பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. ஆனால் சில இடங்களில் மணிலா அறுவடைக்கு ஆட்கள் கிடைக்காமல் விவசாயிகள் அவதி அடைந்து வருகின்றனர். இருப்பினும் போதிய விலை கிடைத்து வருவதால் அதிக கூலி கொடுத்து

மணிலா அறுவடை செய்து வருகின்றனர். இது பற்றி விவசாயி ஒருவர் கூறுகையில், இந்த ஆண்டு போதிய மழை இல்லாததால் மணிலா சாகுபடியை விவசாயிகள் குறைத்து விட்டனர். இருப்பினும் சாகுபடி செய்துள்ள இடங்களில் மணிலா அறுவடை பணிகள் நடைபெற்று வருகிறது. வரத்து குறைவாக இருப்பதால் மணிலாவுக்கு போதிய விலை கிடைக்கிறதுஎன்றார்.

ரூ.5ஆயிரத்துக்குவிற்பனை

இது பற்றி வேளாண்மை அதிகாரி ஒருவர் கூறுகையில், மாவட்டம் முழுவதும் 22 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் மணிலா சாகுபடி செய்திருந்தனர். தற்போது 50 சதவீதம் மணிலா அறுவடை பணிகள் முடிந்து விட்டன. இன்னும் 2 வாரங்களில் அறுவடை பணிகள் அனைத்து இடங்களிலும் முடிந்து விடும் என்றார். நேற்று கடலூர் மார்க்கெட் கமிட்டியில் 80 கிலோ அடங்கிய ஒரு மூட்டை மணிலா பயிர் ரூ.5 ஆயிரத்து 279–க்கு விற்பனை செய்யப்பட்டது.

## வெயிலின் தாக்கத்தால் எலுமிச்சம்பழம் விலை ‘கிடுகிடு’ உயர்வு கிலோ ரூ.70–க்கு விற்பனை



திண்டுக்கல், திண்டுக்கல்லில், வெயிலின் தாக்கத்தால், 10 நாட்களில் எலுமிச்சம்பழம் விலை கிலோவுக்கு ரூ.30 அதிகரித்து உள்ளது. தற்போது, ரூ.70–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

விலைஉயர்வு

திண்டுக்கல் மாவட்டத்தில் சிறுமலை, அய்யம்பாளையம், வடகாடு, மணலூர், பன்றிமலை உள்ளிட்ட பகுதிகளில் எலுமிச்சை சாகுபடி

செய்யப்படுகிறது. மொத்தம், 3 ஆயிரத்து 81 ஹெக்டேர் பரப்பில் இந்த சாகுபடி நடக்கிறது. இதில், சிறுமலை பகுதியில் மட்டும் ஆயிரத்து 743 ஹெக்டேர் பரப்பு எலுமிச்சை விவசாயம் செய்யப்படுகிறது. எலுமிச்சம்பழம் ஊறுகாய், ஜூஸ், மூலிகை பொருட்கள் தயாரிக்கவும், கோவில்களில் பூஜையிலும் பயன்படுத்தப்படுகிறது. இதன் தேவை எப்போதும் இருக்கும். தற்போது, எலுமிச்சை சீசன் நடப்பதால் திண்டுக்கல் நாகல்நகரில் உள்ள சிறுமலை ஷெட்டில் எலுமிச்சம்பழ வியாபாரம் மும்முரமாக நடந்து வருகிறது. வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால், எலுமிச்சம்பழத்தின் தேவை அதிகரித்து உள்ளது. இதனால், விலையும் கிடுகிடுவென உயர்ந்துள்ளது. இதுகுறித்து வியாபாரி ஒருவர் கூறியதாவது:–

<u>வெயிலின்தாக்கம்</u>

தற்போது, எலுமிச்சை சீசன் தொடங்கி உள்ளது. போதிய விளைச்சல் இல்லாததால் வரத்து சற்று குறைவாக தான் காணப்படுகிறது. எனினும், கடந்த ஆண்டைவிட இது அதிகம் தான். தற்போது, தரமான எலுமிச்சம் பழங்கள் கிலோ ரூ.70–க்கு விற்பனை செய்யப்படுகின்றன. தரம் குறைந்த பழங்கள் ரூ.50 முதல் ரூ.55 வரை விற்கப்படுகிறது. வரத்து குறைவு, வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பது உள்ளிட்ட காரணங்களினால் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. கடந்த 10 நாட்களுக்கு முன்பு வரை கிலோ ரூ.40–க்கு தான் எலுமிச்சம் பழங்கள் விற்பனை செய்யப்பட்டன. இங்கு வியாபாரத்துக்காக வரும் பழங்கள், கேரளா, கோவை, ஈரோடு, சேலம் உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இனி விலை குறைய வாய்ப்பு இல்லை. தொடர்ந்து எலுமிச்சம் பழத்தின் விலை அதிகரிக்கவே செய்யும். இவ்வாறு அவர் கூறினார்.

## நொய்யல் பகுதிகளில் வெயில் தாக்கம் அதிகரிப்பால் நுங்கு விற்பனை அமோகம்



நொய்யல் பகுதிகளில் வெயில் தாக்கம் அதிகரிப் பால் நுங்கு விற்பனை அமோகமாகநடைபெற்றுவருகிறது.

கோடைக்காலம்

கோடைக்காலம் தொடங்கி யதில் இருந்தே கடும் வெயில் வாட்டி வருகிறது. இதனால் பகலில் பொதுமக்கள் வெளியில் செல்ல முடியாமல் வீட்டிலேயே முடங்கி கிடந்து வருகின்றனர். கோடை க்காலம் தொடங்கினாலே சாலை ஓரங்களில் நுங்கு விற் பனை சூடு பிடிப்பது வழக்கம். இந்தநிலையில் தற்போது நுங்கு வரத்து அதிகரித்துள்ளது. இதனால் சாலையோரங்களில் இதன் விற்பனை அமோகமாக நடந்து வருகிறது. கரூர் மாவட்டம், நொய்யல், புன்னம்சத்திரம், பவித்திரம், புன்னம் உள்ளிட்ட இடங்களில் இருந்து நுங்கு வரத்து அதிகரித்து உள்ளது. இப்பகுதியில் இருந்து நொய்யல், புன்னம்சத்திரம், வேலாயுதம்பாளையம், புகழூர் சுற்றுவட்டார பகுதிகளில் நுங்கு வியாபாரிகள் அதிக அளவில் நுங்குகளை வாங்கி சென்று விற்பனைசெய்துவருகின்றனர்.

விற்பனைஅமோகம்

வியாபாரிகள் 3 நுங்குகளை ரூ.10–க்கு விற்பனை செய்து வருகின்றனர். இது குறித்து நுங்கு வியாபாரி ஒருவர் கூறுகையில், வழக்கத்தை விட முன்பே நுங்கு வரத்து அதிகரித்து உள்ளது. கோடைக்காலம் என்பதால் நுங்கு விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது. பொதுமக்கள் அதிக அளவில் வாங்கி சாப்பிட்டு விட்டும், வீடுகளுக்கு நுங்குகளை வாங்கியும் செல்கின்றனர். வெயில் காலங்களில் நுங்கு அதிக அளவில்

சாப்பிட்டால் சூடு தணியும், மேலும் உடல் நலத்திற்கு நல்லது என்றார்.
பல்வேறுபயன்கள்

நுங்கில் வைட்டமின்–பி, வைட்டமின்–சி, இரும்புச்சத்து, கால்சியம், துத்தநாகம், சோடியம், மக்னீசியம், பொட்டாசியம், தயாமின், அஸ்கார்பிக், அமிலம், புரதம் போன்ற சத்துக்கள் அதிகம் உள்ளது. மேலும், நுங்குக்குக் கொழுப்பை கட்டுப்படுத்தி உடல் எடையை குறைக்கும் தன்மை அதிகம் உள்ளது. உடல் எடையை குறைக்க நினைப்பவர்கள் உணவு கட்டுப் பாட்டுடன் நுங்கை அதிகம் சேர்த்துக் கொள்ளலாம். நுங்கு நீர் வயிற்றை நிரப்பி பசியையும் தூண்டும், மலச்சிக்கல் மற்றும் வயிற்றுப் போக்குக்கு நுங்கு சிறந்த மருந்து. சிலருக்கு உடல் உஷ்ணம் காரணமாக எவ்வளவுதான் தண்ணீர் குடித்தாலும் தாகம் அடங்காது. அவர்கள் நுங்கை சாப்பிட்டால் தாகம் அடங்கிவிடும். ரத்தசோகை உள்ளவர்கள் நுங்கை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் விரைவில் குணமாகி உடல் சுறுசுறுப்பாகும். மேலும், வெயில் காலத்தில் ஏற்படும் அம்மை நோய்கள் வருவதை தடுத்து உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை தருகிறது. இப்படி எண்ணற்ற சிறப்புகளை கொண்ட இந்த நுங்கை பொதுமக்கள் வெயிலில் இருந்து தம்மை பாதுகாத்து கொள்ள விரும்பி சாப்பிடுகின்றனர்.

## <u>விதை சுத்திகரிப்பு நிலையத்தில் இணை இயக்குனர் நேரில் ஆய்வு</u>



ராமநாதபுரம் மாவட்டத் தில் விதை சுத்திகரிப்பு நிலையத்தில் கோவை விதைச்சான்று சுத்திகரிப்பு நிலைய இணை இயக்குனர் நேரில் பார்வை யிட்டுஆய்வுசெய்தார்.

ஆய்வு

ராமநாதபுரம் மாவட்டத் தில் கடந்த ஆண்டு போதிய மழை கிடைக்கப் பெற்றதால் நெல் 1 லட்சத்து 20 ஆயிரத்து 235 எக்டேரிலும், சிறு தானி யங்கள் 7,444 எக்டேரிலும், பயறு வகைப்பயிர்கள் 2,885 எக்டேரிலும், எண்ணெய் வித் துப்பயிர்கள் 4,510 எக்டேரி லும் சாகுபடி செய்யப்பட்டது. விவசாயிகளுக்கு தேவையான தரமான விதைகளை வினி யோகம் செய்யும் பொருட்டு அரசு வேளாண்மை துறையின் மூலமாக பல்வேறு நடவடிக் கைகளை எடுத்து வருகிறது. நடப்பு ஆண்டில் ராமநாதபு ரம் மாவட்டத்தில் நெல், சிறு தானியங்கள், பயறு வகைப் பயிர்கள், எண்ணெய் வித்துப் பயிர்கள் ஆகியவற்றில் 557 ஹெக்டேர் விதைப்பண்ணை கள் அமைக்கப் பட்டது. விதைப்பண்ணை அமைத்த விவசாயிகளிடம் இருந்து இது நாள் வரை நெல் 493 மெட் ரிக் டன், சிறு தானியங்கள் 3 மெட்ரிக் டன், பயறு வகை கள் 1 மெட்ரிக் டன் ஆக மொத்தம் 497 மெட்ரிக் டன் விதை பெறப்பட்டு விதை சுத் திகரிப்பு பணி நடைபெற்று வருகிறது. ராமநாதபுரம் மாவட்டத் தில் விதை சுத்திகரிப்பு நிலை யம் திருப்புல்லாணி யூனியன் திருஉத்திரகோசமங்கையிலும், பரமக்குடியிலும் இயங்கி வரு கிறது. நடப்பு ஆண்டில் திரு வாடானை தாலுகா கல்லூ ரில் புதிதாக விதை சுத்திக ரிப்பு நிலையம் அமைக்கப்பட் டுள்ளது. இந்த புதிய விதை சுத்திகரிப்பு நிலையத்தை விதைச்சான்று இணை இயக் குனர் பழனிச்சாமி, மாவட்ட வேளாண்மை இணை இயக்கு னர் கிருஷ்ண மூர்த்தி ஆகி யோர் ஆய்வு செய்தனர். அப் போது சுத்திகரிப்பு நிலையத் தில் பின்பற்ற வேண்டிய விதைச்சான்று நடைமுறை கள், எந்திரங்கள் மற்றும் பதி வேடுகள் பராமரிப்பு குறித்து கேட்டறிந்தனர். பின்னர் பர மக்குடியில் இயங்கி வரும் விதை பரிசோதனை நிலையத் தில் விதை முளைப்புத்திறன் அறை மற்றும் விதை பரிசோதனை முறைகளை ஆய்வு செய்தார்.

நடவடிக்கை

அப்போது அவரிடம் ராம நாதபுரம் மாவட்டத்தில் 2014- 15ம் ஆண்டில்

1,201 விதை மாதிரிகள் பரிசோதனை நிலையத்தில் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது என்றும், இதுவரை 133 மாதி ரிகள் தரமற்றது என கண்ட றியப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். பரமக்குடியில் இயங்கி வரும் விதை சுத்திகரிப்பு நிலையத் தில் நெல் விதைகளில் மிதப்பு பரிசோதனை மற்றும் சுத்தி செய்யப்பட்ட நெல்களில் தரத் தினை அவர் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது ராமநாத புரம் மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குநர் மணி மா றன், விதைச்சான்று உதவி இயக்குநர் சேக் அப் துல்லா, வேளாண்மை உதவி இயக்கு னர்கள் நாகராஜ், கண்ணையா, விதைச்சான்று அலுவலர் பாக்கியராஜ் ஆகியோர் உட னிருந்தனர்.